பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

03 08 2024 6 45

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வேளாண் பொருளாதார நிபுணர்களின் 32-வது சர்வதேச மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.
- போலிச் செய்திகளை கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.
- கேரளாவில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் முழுவீச்சில் ஈடுபடுமாறு அங்கு சென்றுள்ள தமிழக குழுவினருக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் பருவமழைக் காலத்தில் வெள்ளத்தடுப்புக்காக உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் பாட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

வேளாண் பொருளாதார நிபுணர்களின் 32-வது சர்வதேச மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

7-ம் தேதி வரை நடைபெறும் இந்த மாநாட்டின் கருப்பொருள் நிலையான வேளாண் மற்றும் உணவு முறைகளை நோக்கிய மாற்றம்' என்பதாகும்.

பருவநிலை மாற்றம், இயற்கை வளங்கள் குறைவது, அதிகரித்து வரும் உற்பத்தி செலவுகள் போன்ற உலகளாவிய சவால்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.

ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பது, வேளாண்மையில் தொழில்நுட்பத்தின் பங்கை அதிகரிப்பது போன்றவை குறித்தும் இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

இதில் 75 நாடுகளைச் சேர்ந்த ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

போலிச் செய்திகளை கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், போலிச் செய்திகள் சமூகத்தின் தீய சக்திகளாக திகழ்கின்றன என்று அவர் கூறினார்.

போலிச் செய்திகள் பரவுவதை தடுக்க மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் பத்திரிகை தகவல் அலுவலகத்தின் சார்பில், செய்திகளின் உண்மை தன்மையைக் கண்டறியும் பிரிவு செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், திரைப்படத் துறையினரை பாதுகாக்கும் நோக்கில் ஒளிப்பதிவு திருத்த சட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதற்கென ஒவ்வொரு மண்டலத்திலும் ஒருங்கிணைப்பு அதிகாரி நியமிக்கப்பட்டிருப்பதாகவும் திரு. எல். முருகன் கூறினார்.

<<<<>>>>

மேட்டூர் அணையில் இருந்து காவிரி ஆற்றில் அதிக அளவு உபரி நீர் வெளியேற்றப்படும் நிலையில், கரையோரப் பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நேற்று மாலை ஆய்வு மேற்கொண்டார்.

முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளோருடன் முதலமைச்சர் தொலைபேசியில் பேசினார்.

தென்மேற்குப் பருவமழை காரணமாக ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் அவர் அதிகாரிகளைக் கேட்டறிந்தார்.

மேட்டூர் அணையில் இருந்து அதிக உபரிநீர் வெளியேற்றப்படுவது தொடர்பாக ஒரு கோடியே 54 லட்சம் கைபேசிகளுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் 26 முகாம்கள் அமைக்கப்பட்டு ஆயிரத்து 621 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் முதலமைச்சரின் ஆய்வுக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய மாநில தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இந்த ஆண்டு பருவமழைக் காலத்தை ஒட்டி உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

கேரளாவில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் முழுவீச்சில் ஈடுபடுமாறு அங்கு சென்றுள்ள தமிழக குழுவினருக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்றிரவு அரசின் உயரதிகாரிகளுடன் இணைந்து காணொலி வாயிலாக கேரளா சென்றுள்ள அதிகாரிகளுடன் நேற்றிரவு அவர் ஆலோசனை நடத்தினார்.

பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க வேண்டும் என்று அவர் கூறினார்.

குடும்பத்தினரை இழந்திருக்கும் மக்கள் குறித்தும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

<<<<>>>>

கடலில் பிளாஸ்டிக் கழிவுகள் கலக்காமல் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

இத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து தலைமைச் செயலகத்தில் நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், பிளாஸ்டிக் கழிவுகளை முறையாகப் பிரித்து மறுசுழற்சி செய்வதற்கான நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில் இந்த ஆண்டு பட்ஜெட்டில் வெளியிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் துறை தொடர்பான அறிவிப்புகளை செயல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

ஆடிப்பெருக்கு விழா இன்று தமிழகத்தில் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி நதிகளில் மக்கள் புனித நீராடி வழிபாடுகளை மேற்கொள்கின்றனர்.

இந்த ஆண்டு மேட்டூர் அணையில் உபரிநீர் திறக்கப்பட்டுள்ளதால் காவிரி கரையோரப் பகுதிகளில் மக்கள் புனித நீராட உரிய முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்தல் காவிரி கரையோரப் பகுதிகளில் ஆடிப்பெருக்கு விழா உற்சாகமாக கொண்டாடப்படுவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

நாமக்கல்லில் வல்வில் ஓரி விழாவையொட்டி மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அடுத்த சில நாட்களில் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தக் கூடும் எனவும் இஸ்ரேலின் பாதுகாப்புக்கான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்கும் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

<<<<>>>>

சீனாவில் சாங்க்ஸி மாகாணத்தில் வெள்ளத்தால் பாலம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 38 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

நாட்டில் நடப்பு கரீப் பருவத்தில் இதுவரை 904 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் நடவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜவுளித்துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக மத்திய அரசு ஆயிரத்து 480 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி பகுதியில் வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி அழகு மீனா ஆய்வு செய்தார்.

<<<<>>>>

தேனி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான பெரியம்மை நோய் தடுப்பூசி முகாம் வரும் 5ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி ஷஜீவனா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் பள்ளி செல்லாக் குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களைப் பள்ளியில் சேர்ப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் திரு பிரபு சங்கர் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஷில்பா பிரபாகர் சதீஷ் மற்றும் ஆட்சியர் சந்திரகலா தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

சென்னையை அடுத்த தாம்பரம் ரயில் நிலையத்தில் பராமரிப்புப் பணிகள் காரணமாக இன்று முதல் 14-ம் தேதி வரை மின்சார ரயில்கள் இயக்கப்படுவதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், பயணிகளின் நலன் கருதி அந்த வழித்தடத்தில் கூடுதலாக 70 பேருந்துகள் இயக்கப்படும் என மாநகரப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்தி*

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் பாட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்றிரவு நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் அவர், சீன தைபேயின் **Tien Chen Chou**-ஐ 19-21, 21-12 என்ற செட் கணக்கில் வென்றார்.

ஒலிம்பிக் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர் அரை இறுதிக்கு முன்னேறுவது இதுவே முதல் முறையாகும்.

<<<<>>>>